www.tamilarangam.net

# தமிழர் விடுதலைக் கூட்டணி

# දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ

# TAMIL UNITED LIBERATION FRONT

Telephone: (9411) 2347721
Fax: (9411) 2384904

30/1B, Alwis Place,
Colombo-03. Sri Lanka.

நீண்ட இக்கடிதத்திற்கு என்னை மன்னிக்கவும். முக்கிய பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டதனாலேயே கடிதம் நீண்டு விட்டது. நீங்கள் தயவுடன் அனுகி தகுந்த நடவடிக்கை எடுப்பீர்களென்ற எதிர்ப்பார்ப்பில் இந்த நீண்ட கடிதத்தை எழுதுகிறேன்.

நோர்வேயின் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் புலிகளையும் அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவருவதற்கான பொறுப்பை ஏற்றபோது இனப்பிரச்சினைக்கு திருப்திகரமான தீர்வு எட்டப்படும் என பலரும் மகிழ்ச்சியடைந்தனர். எரிக்சொல்ஹெய்ம் அனுசரணையாளர் நிலையிலிருந்து மத்தியஸ்தர் நிலைமைக்கு மாறிய போது நான் அதனை வரவேற்றேன். அவர் சங்கடமான நிலைமைகளை தடைகளை அவரது பாதையில் எதிர்நோக்கியபோது அதில் நான் அக்கறை செலுத்தினேன். ஒரு நாள் பாராளுமன்ற சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையில் கூடியபோது சொல்ஹெய்ம் அவர்களும் கலரியில் பிரசன்னமாகி இருந்தார். ஒரு பாராளுமன்ற அங்கத்தவர் சொல்ஹெய்மை கீழ்த்தரமாக விமர்சித்தார். அப்போது முன்வரிசையில் அமர்ந்திருந்த உறுப்பினர்கள் அந்த உரையை கண்டிக்கத் தவறியபோது நான் எதிர்கட்சியில் இருந்தபோதும் அந்த பாராளுமன்ற உறுப்பினரின் உரையைக் கண்டித்ததோடு இந்த நாட்டின் சார்பில் நான் மன்னிப்பும் கோரியிருந்தேன். தற்போது சொல்ஹெய்ம் தனது மத்தியஸ்தர் நிலைப்பாட்டிலிருந்து வழுவி பாராபட்சமாக செயற்படுவதாக உணர நான் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறேன். அவர் துன்பப்படும் தமிழ் மக்களை கருத்திற்கெடுக்காமல் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாகவே நான் உணர்கிறேன். தமிழர்களுடைய பிரச்சினை தொடர்பாக அவருடைய தற்போதைய நிலைப்பாடு தமிழர்களின் நலன்களுக்குப் பாதகமானது. தமிழர்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

நான் தமிழ் சமூகத்தின் மூத்த பிரஜை. 45 வருடங்களுக்கு மேலாக தீவிர அரசியல் ஈடுபாடு கொண்டிருந்தவன். பாராளுமன்ற உறுப்பினராக 17 வருடம் சேவையாற்றியிருக்கிறேன். வடக்கு- கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் ,அரச சார்பற்ற நிறுவனங்களும் சரிவர தமது கடமைகளை செய்யாத நிலையில் நான் எனது கடமைகளை சரியாக செய்யவேண்டிய கடப்பாடு இருக்கிறது. துன்பத்தில் உழலும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகளை வெளி உலகுக்கு கொண்டு வரவேண்டிய தேவை இருக்கிறது. பெரும்பாலான தமிழர்களின் குரல் புலிகளின் துப்பாக்கிகளால் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல நாடுகளின் தலைவர்கள் இதுவிடயத்தில் மௌனமாக இருக்கும் நிலையில் எனக்கு இது கடமையென்ற வகையில் நான் ஆபத்துக்களை எதிர்நோக்கத் தயராக இருக்கிறேன். சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் நோக்கிலேயே இந்த கடமையை உங்களின் மூலமாக மேற்கொள்கிறேன். இக்கட்டான நிலையில் இருக்கும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை ஒரு சில தனிப்பட்டவர்களின் கைகளில் இல்லாமல் சர்வதேச சமூகம் தனது மௌனத்தை கலைத்து தனது நிலைப்பாட்டை முன்வைக்கவேண்டும்.

இந்த நாட்டிற்கு இன்று சமாதானம் தான் வேண்டும். அதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனால் சமாதானத்திற்காக நாம் எந்த விலையையும் கொடுக்க முடியாது. அடிப்படை உரிமைகளையும், மனித ஜனநாயக உரிமைகளையும் புலிகளிடம் தாரைவார்த்துவிட்டு வரும் சமாதானம் எமக்கு வேண்டாம். தமிழர்கள் எதை விரும்புகிறார்கள் என்றால் சுய மாயாதையுடனும் ,தமது சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் உருவாகும் சமாதானத்தையே. நாங்கள் தென்னிலங்கையில் வாழும் ஏனைய இன மக்களைப்போல் சகல உரிமைகளுடனும் வாழ்வதையே விரும்புகிறோம்.
அரசாங்கத்தினதும் எதிர்கட்சியினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சுயநல நோக்குடனேயே சமாதானத்தை பற்றி பேசுகிறார்கள். நேரடியாகவும் மறைமுகமாகவும் புலிகளுக்கு பாராட்டு பத்திரம் வழங்குவது என்பது, கள நிலவரங்களை சரியாக புரிந்து கொள்ளாததாலேயே. அண்மையில் எரிக் சொல்ஹெய்ம் விடுத்த அறிக்கையில் மூன்று வருட சமாதான ஒப்பந்தம் ஆயிரக்கணக்கானோரின் உயிர்களை பாதுகாத்திருப்பது உற்சாகமளிப்பதாக தெரிவித்துள்ளார். அது உண்மை. ஆனால் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன, என்பதனை அவர் கருத்தில் கொள்ளவில்லை.

ஒவ்வொருவரும் சமாதானத்தை பற்றியும் ,புலிகளின் கோரிக்கைகளை திருப்திப்படுத்துவதை பற்றியுமே மாத்திரம் பேசுகிறார்கள். இந்தப் பட்டியலில் இறுதியாக இணைந்திருக்கும் உலக வங்கிக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி பீட்டர் ஹெரோல்ட் ஆறு பில்லியன் ரூபாய்களை புலிகளுக்கு ஒதுக்குவதாக தெரிவித்திருப்பது ,புலிகள் சட்டபூர்வமான பங்காளர்கள் என்பது போல் அமைகிறது. இது கள நிலவரம் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ளாமையையே என்பதையும் புலப்படுத்துகிறது. உலகவங்கி மக்களுக்கானதே தவிர புலிகளுக்குரியதல்ல. துரதிஷ்டவசமாக புலிகளின் அடக்கு முறையின் கீழ் அடிமைப்படுத்தப்பட்டு மௌனமாக கண்ணீர் வடிக்கும் தமிழ் மக்களை எவரும் கருத்திற்கு எடுக்கவில்லை. தமிழர்களை அவர்களின்

www.tamilarangam.net

விடுதலைப் போராளிகள் எனக் கூறப்படுவோரிடமிருந்து மீட்பது அவசியமாகவுள்ளது. அவர்கள் நிரந்தர அடிமைகளாக்கப்படுவதற்கு முன் அதனை செய்ய வேண்டியதாகவுள்ளது. இந்த மாதிரி தமிழர்கள் வேறு எந்த அரசாங்கத்தின் கீழும் துன்பப்படவில்லை. ஒரு கட்டத்தில் பிரதானமாக கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் அநீதி இழைக்கப்பட்டது. இது முற்றுமுழுதாக பாரபட்சமாக இருந்ததென்றில்லை. ஓரளவு ஜனநாய மனித உரிமை மீறல்கள் இருந்தபோதும் தமிழர்கள் இவ்வுரிமைகளை அனுபவித்தார்கள். இன்று நடைபெறுபவற்றுடன் ஒப்பிடுகையில் கடந்தகால நிகழ்வுகள் மிக அற்பமானவையாகவே தெரிகின்றன. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் படிப்படியாக புலிகளின் ஊடுருவல் மிக மோசமடைந்தது. இதனை அரசு தனது கட்டுபாட்டுப்பகுதிகளில் அனுமதித்தது மிகவும் தவறான வேலையாகும். அடுத்த விடயம் புலிகள் ஏ9 பாதையில் பொருட்களுக்கு வரி விதிப்பதற்கு அனுமதித்ததும் அடுத்த மிகப்பெரிய தவறாகும்.

கடந்த காலங்களில் தமது எதிர்ப்பை ஜனநாயக வழிகளில் சுதந்திரமாக எந்த வகையிலும் காட்ட முடிந்தது. மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால்கள் ,கறுப்புக் கொடி ஆர்பாட்டங்கள், எதிர்ப்புக் கூட்டங்கள் போன்றவை யாருடைய நிர்ப்பந்தத்தின் கீழும் நடந்ததில்லை. அது வன்முறையற்றதாக அமைந்திருந்ததால், அஹிம்சை வழிப்பட்டதாக இருந்ததால் பொலிசார் அதில் தலையிடவில்லை. எங்களுக்கென சுதந்திரமான ஊடகங்கள் இருந்தன. எழுதுபவர்கள் எதிராகவோ, சாதகமாகவோ தமது மனச்சாட்சிக்கேற்ப அவர்களால் எழுத முடிந்தது.

கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராக இருந்தபோது அவர் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தை திறந்து வைப்பதற்கு விஜயம் செய்திருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்போது அவருடைய கொள்கைகளை கண்டித்து பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அவருடைய விஜயத்தை எதிர்த்து பெரும் சத்தியாக்கிரக போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் அவர் ஒரு அசம்பாவிதமும் நிகழாத வகையில் யாழ்ப்பாண பல்கலைகழகத்தை திறந்து வைக்க முடிந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றிய எவரும் அச்சுறுத்தப்படவில்லை. அடிப்படை உரிமைகளில் யாரும் தலையிடவுமில்லை.

இந்த வகையான சுதந்திர ஜனநாயக உரிமைகளை நாங்கள் கடந்த காலத்தில் அனுபவித்தோம். புலிகளின் மூளைச்சலவை செய்யப்பட்ட அங்கத்தவர்கள் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்ந்ததையும் சிங்களமக்களாலோ வேறு எவராலுமோ அடக்கி ஒடுக்கப்படவில்லை என்பதையும் நம்பமாட்டார்கள். கற்பனை கூடச்செய்து பார்க்க முடியாது

இன்று தமிழ் பகுதிகளில் நடப்பவை பேரதிர்ச்சியை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. எமது மக்கள் சுதந்திரமாக பேசவோ எழுதவோ முடியாது. புலிகளின் தலையீடின்றி எதனையுமே செய்ய முடியாது. முறைப்படியானதாக அல்லாத சில சில்லறை அமைப்புக்கள். மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் என்றபெயரில் புலிகளால் இயக்குவிக்கப்படுகின்றன. அவை புலிகளின்

நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. அப்பாவி பாடசாலை பிள்ளைகள் பெருந்தொகையில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்பாட்டத்தில் புலிகளின் பின்னணியில் நிர்பந்தத்தின் பேரில் பங்குபற்ற வைக்கப்படுகிறார்கள். நன்கு கல்விகற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களாலேயே இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை விளங்கிக்கொள்ள முடியாது. அப்படியிருக்கும்போது இந்த அமைப்புக்களாலும் , பாடசாலை மாணவர்களாலும் எவ்வாறு அதனை விளங்கிக்கொள்ள முடியும்? அரசாங்கத்துடன் பேசுவதானால் இடைக்கால நிர்வாக அதிகார சபையையை புலிகள் முன் நிபந்தனையாக்குகிறார்கள் .

தமிழ் மக்கள் தற்போது புலிகளின் தயவில் வாழ நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் அதாவது 1972 மே மாதத்தின் பின் தீவிர அரசியலில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் மீது அரசு குரூரத்தை ,வன்முறையை கட்டவிழ்த்து விட்டதை நான் மறுக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் அப்பாவி தமிழ் இளைஞர்களும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் கொல்லப்பட்டனர். நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டனர். சித்திரவதைகளை அனுபவித்தனர். ஆனால் தடுத்து வைப்பிலும் கொலைகளிலும் சித்திரவதைகளிலும் புலிகள் இன்று சகல சாதனைகளையும் முறியடித்து விட்டனர். அண்மையில் வவுனியாவில் இலங்கை யத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்னுமொரு அமைப்பைச்சேர்ந்த இளைஞர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை அறிந்து புலிகளின் முகாமுக்கு விசாரிக்கச் சென்றபோது அவர்களின் கழுத்தையே பிடித்து வெளியே தள்ளினர். யுத்தநிறுத்த ஒப்பந்தம் இத்தகைய நடவடிக்கைகளை அரசியல் நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகள் காரணமின்றி ஈவிரக்கமற்ற முறையில் மாற்று கட்சியினரைப் படுகொலை செய்ததனால் பெருந்தொகையான மாற்றுக் கட்சிகளை சேர்ந்த தமிழ் இளைஞர்களில் வசதி படைத்தவர்கள் நாட்டை விட்டு தப்பியோடினார்கள். பெருந்தொகையானோர் அவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்று வரை தெரியாது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னரும் மாற்றுக் குழுக்களை சேர்ந்த இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் என பழி சுமத்தப்பட்டனர். என்ன விதமான தகவல்களை புலிகளுக்கு எதிராக அவர்கள் கொடுத்திருக்க முடியும். புலிகள் எவ்வளவு பேரும் எங்கு வேண்டுமானாலும் செல்லக்கூடியவர்களாக இன்று இருக்கிறார்கள். பாடசாலை அதிபர்கள் ,கல்விமான்கள் ,வழக்கறிஞர்கள் ,ஊடகவியலாளர்கள் ,அரச உயர் அதிகாரிகள், அரச அதிபர்கள் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு போதும் சிங்கள இராணுவத்தால் இந்த தராதரத்தில் ஆட்கள் கொல்லப்படவில்லை. இந்தக் கொலைகள் தமிழர்களுக்குள் தமிழர்களால் தமிழர்களுக்கு நேர்ந்தது.
ஒன்பது மாகாணங்களில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தமிழர் செறிந்து வாழ்கிறார்கள் . இந்த இரு மாகாணங்களும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. ஒன்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. மற்றது அரச கட்டுப்பாட்டில் உள்ளது. 22 பெப்ரவரி 2002 இல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் புலிகளும் அரசாங்கமும் ஒவ்வொரு தரப்பினரதும் கட்டுப்பாட்டில் உள்ளவற்றை மதித்து நடப்பதென்று, தமக்குள் ஒரு உடன்பாட்டிற்கு வந்திருந்தனர். புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் யாரும் செல்ல முடியாது. புலிகளின் இரும்புத் திரைக்குப் பின்னால் என்ன

நடக்கிறதென்று யாருக்கும் தெரியாது. எந்தத் தகவலும் அங்கிருந்து கசிவதற்கு வாய்ப்பில்லை. எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்களுக்கு புலிகளுடன் பேசும் போது புலிகளின் கட்டுபாட்டு பிரதேசமான கிளிநொச்சியில் அவர்கள் அமர்ந்திருந்து பேசும் இடத்தை தவிர அவர் வேறு எந்த பகுதிக்கும் சென்று வர அனுமதி கிடையாது. சர்வதேச சமூகத்துக்கு சொல்ஹெய்ம் இந்த இரும்பு திரைகளுக்கு பின் எல்லாம் சரியாக இருக்கிறதென்று தெரிவிப்பாரா? அவர் அங்குள்ள மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு உத்தரவாதமளிப்பாரா? என்னால் உறுதியாக கூற முடியும். .அவரால் முடியாது.

**“21ம் நூற்றாண்டில் நவீன உலகில் ஐக்கிய நாடுகள் சபை இயங்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு நீண்ட காலத்தின் பின், ஒரு சில நாடுகளை தவிர சகல நாட்டு மக்களும் பூரண ஜனநாயக உரிமையுடன் வாழும் இவ்வேளையில், விடுதலையின் பேரால் புலிகள் இங்கு தமிழ் மக்களை அடிமைகளாக்கி வைத்திருக்கும் நிலை நமது நாட்டிலே காணப்படுகிறது”**

இரு பகுதியினருக்கும் இடையே யுத்த நிறுத்தம் கையெழுத்தாகி மூன்று வருடங்களுக்குப் பின்னர் எதுவித மாற்றமும் இல்லை. வேடிக்கை என்னவென்றால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசு இயந்திரத்தின் செயற்பாடுகள் புலிகளின் பணிப்புரையின் பேரில் செயற்படுகின்றன. இவைகள் முற்றுமுழுதாக அவர்களின் சுயதேவையினை மட்டுமே பூர்த்தி செய்கிறது. புலிகளின் பிரதேசங்களுக்கு மற்றவர்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு படையினர் பாதை தவறி சென்ற போது அவர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டு புலிகளின் நீதிமன்றத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். ஆனால் அரசின் தடுப்புக்காவலில் இருந்த புலிகளின் 10 அங்கத்தவர்களை விடுவித்தால் தான் அந்த இருவரையும் விடுவிப்பதாக புலிகள் பேரம் பேசினர். புலிகளால் கோரப்பட்டவர்களை அரசு விடுதலை செய்த பின்பே இருவரையும் புலிகள் விடுதலை செய்தனர். அவர்களுடைய நீதிமன்றம் இந்த 10 புலி சந்தேக நபர்களையும் விடுவித்தால்தான் இந்த இரு படையினரை விடுவிப்போம் என்று எவ்வாறு தீர்மானித்தது. அவர்களின் சட்டம் எவ்வாறு பண்டமாற்றாக செயற்பட்டது ,என்பதை எம்மால் அறியமுடியவில்லை. பெருந்தொகையான தமிழர்கள் இவ்வாறு சிறிய குற்றங்களுக்காக நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். துரதிஷ்டவசமாக மிக நீண்டகாலம் அநீதியான முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர்களை விடுவிப்பதற்கான சரத்துக்கள் எதுவும் எமது சட்டத்தில் இல்லை.

சில நாட்களுக்கு முன்னர் வழி தவறி கிளாலியில் ஆட்கள் நடமாடமுடியாத பிரதேசத்துக்குள் படையினர் இருவர் பிரவேசித்தபோது புலிகள் ஒருவரை சுட்டுக் கொன்றார். மற்றவர் படுகாயமடைந்தார்.

மறு பக்கத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான நாளில் இருந்து புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியினுள் சுதந்திரமாக செல்ல முடிந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துக்களின் படி 50 பேர் முதல் 30 நாட்களிலும் மறு 50 பேர் 30 நாட்களிலும் 90 நாட்களுக்கு பின் எவ்வளவு தொகையினரும் அரசியல் வேலைகளுக்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆயுதங்களுடன் செல்ல முடியாது, என்ற ஒரேயொரு தடைமாத்திரமே அதில் இருந்தது. அரசாங்கத்தை ஏமாற்றி இந்த சரத்து மிகவும் தந்திரமான முறையில் சேர்க்கப்பட்டிருந்தது. புலிகளிடமிருந்து அரசாங்கம் இந்த பிரதேசங்களை கைப்பற்றுவதற்கு எடுத்த காலத்தையும் மற்றும் விடயங்களையும் அரசாங்கம் கணக்கில் எடுக்கத் தவறிவிட்டது. அவர்கள் இன்று அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் மாத்திரமல்ல இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் பரந்திருக்கின்றனர்.

ஒவ்வொரு தரப்பினரதும் கட்டுப்பாட்டில் உள்ளவற்றை மதித்து நடப்பதென்று இன்னுமொரு சரத்து அங்கீகரிக்கப்பட்டது. மறு பக்கத்தில் அரசாங்கம் புலிகளிடம் எவருக்கெதிராகவும் ஆயுதம் பாவிக்க கூடாது என்ற உத்தரவாதத்தைப் பெற்றிருக்க

வேண்டும். அரசாங்கம் அதனைப் பெறத்தவறிவிட்டது. இந்த உத்தரவாதத்தை பெறாததன் விளைவுதான் நூற்றுக்கணக்கான மாற்று அமைப்புக்களின் அங்கத்தவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமானது. இன்று புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சகல இடங்களிலும் ஆதிக்கம் பெற்றிருப்பதால் புலிகளை ஆதரிக்காதவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சமாதான ஒப்பந்தம் கைச்சாதிடப்படுவதற்கு முன்பு அரச கட்டுபாட்டு பகுதிகளில் எப்பிரதேசத்திற்கும் புலிகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சென்று வர முடிந்தது.
ஆனால் இன்று புலிகள் அதிகாரம் செலுத்துவதால் வடக்கு கிழக்கில் அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதிகளில் கூட புலிகளை ஆதரிக்காதவர்கள் சென்றுவரமுடியாத நிலையே காணப்படுகிறது.

புலிகள் சிறுவர்களை யுத்தத்திற்கு அணி திரட்டுவது கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் கூட புலிகளின் இந்த நடவடிக்கையை எதிர்க்கவில்லை.

சாதாரண மக்களும் பாடசாலை பிள்ளைகளும் புலிகளின் அச்சுறுத்தலின்கீழ் அரசுக்கு எதிரான ஆர்பாட்டங்களில் பங்குபற்ற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். புலிகளால் ஒழுங்குபடுத்தப்படும் ஆர்பாட்டங்களும் ,ஹர்த்தால்களும் புலிகளின் அற்பநலன்களுக்காகவும், தம்மை விளம்பரப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் படையினரை ஆதிரமூட்டும் பல சந்தர்ப்பங்களில் அப்பாவி மக்களே பலியாகிறார்கள். ஒரு இராணுவ வாகனம் விபத்தில் சிக்கினால் சாதாரண மக்கள் அந்த இராணுவ வாகனத்தை தீயிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். புலிகள் இராணுவத்தை ஆத்திரமூட்டி இன வன்முறையை தூண்ட முயல்கிறார்கள்.

ஒவ்வொரு புலி அங்கத்தவரும் தலைவர்களாக நடந்து கொள்கிறார்கள். மக்கள் அவர்களுடைய உத்தரவுகளை கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் பயத்துடனும், பீதியுடனுமே வாழ்கிறார்கள். துரதிஷ்டவசமாக இலத்திரனியல் ஊடகங்களோ ,அச்சு ஊடகங்களோ புலிகளுக்கு எதிராக ஒரு

www.tamilarangam.net

வார்த்தை கூட எழுதுவதில்லை. பேசுவதில்லை. வெளிநாடுகளில் உள்ள தமிழ் ஊடகங்களும் புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றன.

நான் வடக்கு- கிழக்கு நிலவரங்களைப்பற்றி மிகைப்படுத்தி கூறவில்லை. இன்னும் அதிகமாகவே புலிகளை பற்றி கூற முடியும். இந்த நிலைமையை கவனமாக ஆராயுமாறும் ,சாதாரண மக்களிடம் உண்மைகளை அறியுமுயலுமாறும் தயவுடன் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த உத்தரவாதமும் இரகசியங்களை பேணும் முறைகளும் இல்லாமல் எதனையும் அவர்களிடமிருந்து பெற முடியாது.

புலிகள் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த முயல்கிறார்கள். தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை பெற்றுக் கொள்வதில் புலிகள் அக்கறை செலுத்தவில்லை. புலிகளுக்கு

எது தேவையோ அதையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வடக்கு-கிழக்கு முழுவதும் புலிகளின் கட்டுபாட்டிலேயே இயங்குகிறது. அவர்கள் அரச அதிகாரிகளுக்கு உத்தரவுகளை மேலிருந்து கீழ்வரை வழங்குகிறார்கள். அவர்கள் புலிகளின் உத்தரவுகளுக்கு கீழ் படிந்து நடக்க வேண்டும். அமைச்சர் ஒருவரேனும் வடக்கு- கிழக்கில் அரசு கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்கு கூட விஜயம் செய்ய முடியாது. வடக்கு-கிழக்கு ஆளுனர் கூட யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யக்கூடாதென எச்சரிக்கை செய்யப்பட்டார். சகல சுனாமி நிவாரணங்களும் தம்மிடம் கையளிக்கப்பட வேண்டும். 22 த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதியுடனோ அல்லது பிரதம மந்திரியுடனோ பேசி அவர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடக் கூட அனுமதிக்கவில்லை. இவர்களுடைய அகங்காரத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்குரிய நியாயமான பங்கை பெறமுடியவில்லை. மாறாக எஞ்சியவற்றையும் சிந்திச் சிதறியவற்றையும் பொறுக்கி எடுக்கவேண்டிய நிலைக்கு ஆளாகவேண்டியே வரும்.

புலிகள் ஆர்பாட்டங்களிலும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுகிறார்கள். அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் புலிகளின் கொடியை ஏற்றுவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள். பலர் விபத்துக்களில் உயிர் இழந்திருக்கிறார்கள். ஒரு இராணுவ வாகனம் ஒருவரில் மோதினால் அதனை மூலதனமாக்கி மக்களை ஹர்த்தால், ஆர்ப்பாட்டங்கள் செய்யத்தூண்டி கற்களை எறிந்து ஆத்திரமடையச் செய்கிறார்கள். பிள்ளைகளை பிடிக்கும் நடவடிக்கைகள் தொடர்கிறது. அவர்கள் நினைத்ததை எந்த வழியிலும் சாதிக்க நினைக்கிறார்கள். புலிகள் தம்மைத்தாமாக அடக்கப்பழக வேண்டும்.

இலங்கை அரசு புலிகளுக்கு கூடுதலாக விட்டுக்கொடுப்பது தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமைந்து விடும். தமிழர்களின் நலன்களை அரசு சிந்திக்கவில்லை. சமாதானத்தை கொண்டு வருவதன் பேரில் தமிழர்களின் உரிமைகளை முற்று முழுதாக மறந்து விட்டனர்.

ஒரு சமஷ்டி தீர்வே தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும். இந்தியாவின் மாதிரியோ அல்லது வேறு மாதிரிகளோ ஏற்புடையதாக அமையும். எங்களது அயல்நாடு இந்தியாவும் சர்வதேச சமூகமும் சகலரது அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வொன்றை கண்டறிய முடியும் என நான் நிச்சயமாக நம்புகிறேன். புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுதலை செய்யும் பொறுப்பு தற்போது சர்வதேச சமூகத்தின் கைகளிலேயே இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை காண்பதில் உங்கள் அரசை ஈடுபட வைக்குமாறு நான் தயவுடன் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இதனைச் செய்யமுடியாது விட்டால் எப்போதும் இதனைச் செய்ய முடியாது போய்விடும்.

வீ.ஆனந்தசங்கரி
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி